மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : திறமையை அதிகப் படுத்த வேண்டும் என்ற அடிப்படையில்தான் விநியோகத் திட்டங்களைப் பற்றி மறு ஆய்வு செய்து வருகிறோம். அந்த சீர்திருத்தத்தை மேற்கொள்கிறபோது இதற்கான வாய்ப்புண்டு.

திரு. துரை முத்துசாமி : சீர்திருத்தக் கமிஷன் வரும்போது செய்வதாகச் சொன்னார்கள். அது எப்போது வரும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீர்திருத்தக் கமிஷன் அல்ல. நாமே செய்வதுதான்.

ஆசியன் பேரிங்குகள் நிறுவனம்.

*வினா எண் 420— திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்றக் கூட்டுத் துறை நிறுவனம் ஜப்பானியத் தொழில்நுட்ப உதவியுடன் ஹோசூரில் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், பலதரப்பட்ட பேரிங்குகள் தயாரிப்பதற்காக ஆசியன் பேரிங்குகள் லிமிடெட் என்ற நிறுவனத்தை திரு.பழனியப்ப செட்டியார் அவர்களுடன் கூட்டுத்துறையில் சுமார் 12 கோடி திட்ட மதிப்பில் தர்மபுரி மாவட்டம் ஒசூருக்கு அருகில் பாகலூர் கிராமத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

திரு. என். வரதராஜன் : இந்த 12 கோடி ரூபாயில் அரசுத் துறை எவ்வளவு போடுகிறது ? தனியார் எவ்வளவு போடுகிறார்கள் ? பொதுவாக 50 கோடி ரூபாய் திட்டம் என்று சொன்னால் ரூ. 48 கோடி அரசு செலுத்தி இரண்டு கோடி ரூபாய் தனியார் செலுத்தி அவர்கள் இவ்வாறு கூட்டுத் துறையில் தலைமை தாங்குவதால்தான் சில சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. ஆகவே, தனியார் துறை, கூட்டுத்துறை என்றில்லாது பொதுத் துறையில் இந்தத் தொழிலை ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தத் திட்டத்திற்கு 1974-லேயே ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டது. கூட்டுத் துறை என்றால், அரசாங்கம் 26 சதவிகிதம், தனியார் 25 சதவிகிதம், ஆக 51 சதவிகிதம் போடுகிறார்கள். பப்ளிக் ஷேர்ஸ் 49 சதவிகிதம்.

1979 மார்ச் 16]

திரு. மு. அம்பிகாபதி : இந்த ஆசியன் பேரிங்க்ஸ் என்ற நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் ஜப்பான் நாட்டுடன் இணைந்து இந்த நிறுவனத்தைத் துவங்க இருப்பதாகத் தெரிகிறது. பல நாட்டு மூலதனக் கம்பெனிகள், மல்டி நாஷனல் கார்ப்பரேஷன்ஸ் ஊடுருவலாக இது இருக்குமா ? முழுமையாக அரசாங்கத் துறை இதை நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஜப்பான் நாட்டுடன் முதலில் பேசினார்கள். அதற்குப் பிறகு ப்ரான்ஸ் நாட்டுடன் ஒப்பந்தம் பற்றிப் பேசப்பட்டது. கடைசியாக இப்போது ஜி.டி.ஆர். பற்றியும் பேசப்படுகிறது. ஆக ஜெர்மன் ஜனநாயக குடியரசு என்றால் ஏற்றுக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அரசுத் துறை 26 சதவிகிதம், தனியார் துறை 25 சதவிகிதம், ஆக 51 சதவிகிதம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது வேறு விஷயம். நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துகிறவர்கள் தனி நபர்கள். அந்தத் தனி நபர்கள் யார் ? தனி நபர்களிடத்தில்தான் ஒப்படைக்கிறீர்களா அல்லது அரசாங்கமே ஏற்று நடத்தப் போகிறீர்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தனி நபர்களிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டு இந்தத் திட்டம் இப்போது ஆரம்ப நிலையில் உள்ளது. அதைத் தான் சொன்னேன், 1974-ம் ஆண்டிலேயே அது முடிவு செய்யப்பட்டுவிட்டது.

டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லம்.

*வினா எண் 421—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குபவர்களுக்கு அங்கேயே உணவு அளிக்க கேன்டீன் நடத்தப்படுகிறதா?

(ஆ) அதனால் லாபம் ஏற்படுகிறதா ?

(இ) அங்கே வேலை செய்பவர்களுக்கு அங்கேயே தங்குவதற்கு வீடு கட்டும் ஏற்பாடு எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.